DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM

| | | |
|---|---|---|
| Calender | | |
| Miscellaneous | Case No | CC 108/14 |
| Priliminary Register | | |
| Sessions | | |
| | Prosecution | PW 7 |
| Deposition of witness for | Defence | |
| | Court | |
| Name | | Dr. Tr. Ramkumar |
| Father's Name | | |
| Village | | |
| Taluk | | |
| Caste | | |
| Calling | | |
| Religion | | |
| Age | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20

15.04.2019 முதல் விசாரணை:

நான் தற்போது திருமங்கலம் அரசு மருத்துவமனையில் முதுநிலை குடிமையியல் மருத:துவராக பணிபுரிந்து வருகிறேன். 28.06.2013 அன்று நான் பணியிலிருந்த போது **சிலம்பரசன்** 19 வயதுடைய ஆண் பிரேதம் போலிசாரால் என்னிடம் பிரேத பரிசோதனைக்கு கொண்டு வரப்பட்டது. பிரேத பரிசோதனை செய்ததில் கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன. வெளிக்காயங்கள், 1. ஒரு சிராய்ப்பு காயம் வலது தொடைப்பகுதியில் காணப்பட்டது. 2. ஒரு சிராய்ப்பு காயம் வலது மார்பில் காணப்பட்டது. 3. ஒரு சிதைந்த காயம் அளவு 2X 2 செ.மீ X 1 செ.மீ அளவுடையதாக வலது பக்க தலைப்பகுதியில் ஆக்சிபிட்டல் என்னும் பகுதியில் காணப்பட்டது. உள் புற காயங்கள், தலைப்பகுதியில் வலது பக்க கபால ஓடு சிதைந்து காணப்பட்டது, இடது பக்க பரேட்டல் என்னும் எலும்பு

சிதைந்து காணப்பட்டது. ஒரு சிதைந்த காணம் 1/2 x 1/2 செ.மீ அளவில் வலது பக்க ஆக்சிபிட்டல் பகுதியில் காணப்பட்டது, ஒருசிதைந்த காயம் 1/2 X 1/2 செ.மீ அளவில் இடது பக்க பரேட்டல் என்னும் எலும்பு பகுதியீல் காணப்பட்டது. நெஞ்சுப்பகுதி வலது பக்க 2, 3 மற்றும் 4ம் வரிஎலும்புகள் உடைந்து காணப்பட்டன. இருதயமும் நுரையீரலும் செறிவுற்று காணப்பட்டது. வயிற்றுப்பகுதி வயிறு வெறுமையாக காணப்பட்டது, கல்லீரல் மண்ணீரல் சிறுநீரகங்கள் மறறும் உடல்பகுதிகள் செறிவுற்று காணப்பட்டன. நீர்ப்பை வெறுமையாக காணப்பட்டது. மரணத்தின் காரணம் அதிர்ச்சி மற்றும் ரத்தப்போக்கு மற்றும் உடலின்முக்கிய உறுப்புகளுக்கு ( மூளை) ஏற்பட்ட சேதத்தினால் பிரெத பரிசோதனைக்கு 5 முதல் 6 மணிநேரத்திற்கு முன்னதாக ஏற்பட்டிருக்கும் என நான் சான்றளித்தேன். நான் வழங்கிய சிலம்பரசன் என்பவருக்கான பிரேத பரிசோதனை சான்றிதழ் அ.சா,ஆ. 3.

ராமநாதன் 25 வயதுடைய ஆண் பிரேதம் 28.06.2013 அன்று போலிசாரால் என்னிடம் பீரேுத பரிசோதனைக்கு கொண்டு வரப்பட்டது. பிரேதத்தை பரிசோதித்ததில் கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன. வெளிப்புற காயங்கள். 1. ஒரு சிராய்பபு காயம் வலது பக்க தொடையில் காணப்பட்டது. 2. ஒரு சிராய்ப்பு காயம் வலது பக்க கையில் தோள்பட்டைக்கு கீழே காணப்பட்டது. 3. ஒரு சிராய்ப்பு காயம் வலது பக்க விதைப்பகுதியில் காணப்பட்டது. 4. ஒரு வீக்கம் வலது பக்க தலைப்பகுதியில் கரேடடல் என்னும் பகுதயீல் காணப்பட்டது. 5. ஒரு சிதைந்த காயம் 1/2 X 1/2 ெ.சமீ அளவில் இடது பக்க கால் பகுதியில் காணப்பட்டது. உள் புற காயங்கள், தலைப்பகுதி வலது பக்க தலையில் கரேட்டல் என்னும் பகுதி சிதைந்து காணப்பட்டது, ஒரு சிதைந்த காயம் 1/2 X 1/2 செ.மீ அளவில் வலது பக்க கரேட்டல் என்னும் மூளைப்பகுதயீல் காணப்பட்டது. மூளை செறிவ்று காணப்பட்டது. நெஞ்சுப்பகுதி, கயாய் என்னும் எலும்பு இயல்பாய் காணப்பட்டது. இருதயம் மற்றம் நுரையீரல் செறிவுற்று காணப்பட்டது. வயிற்றுப் பகுதி, வயிற்றில் 100 மிலி அளவில் பாதி செறிவுற்ற நிலையில் உணவு திரவம் காணப்பட்டது. கல்லீரல் மண்ணீரல் சிறுநீரகங்கள் மற்றும்குடல் பகுதிகள் செறிவுற்று காணப்பட்டன. நீர்ப்பை வெறுமையாக காணப்பட்டது. மரணத்தின் காரணம் அதிர்ச்சி மற்றும் ரத்தப்போக்கு மற்றும் உடலின் முக்கிய உறுப்பகளான மூளைப்பகுதியின் சேதாரம் பிரேத பரிசோதனைக்கு 4 முதல் 6 மணி நேரம் முன்னதாக எற்பட்டிருக்கலாம் என நான் சான்றளித்தேன். நான்

வழங்கிய ராமநாதன் என்பவருக்கான பிரேத பரிசோதனை சான்று அ.சா,ஆ. 4. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை: இல்லை.